# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 989/மா/2016

ஆணை எண். 283/2017

நாள் : 18/12/2017

23.09.2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்ட நாளிதழ் செய்தி

மண்டல அலுவலர்,
மண்டலம் – 13,
சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

23.09.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் சென்னை, அடையாறு மண்டலம், 179–வது வார்டு, வேளச்சேரி பெத்தேல் அவென்யூ பகுதியில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத்திடல் மற்றும் பூங்கா குறித்து "10 ஆண்டுகளாக மைதானம் ஆக்கிரமிப்பு" என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை இம்முறைமன்ற நடுவம் ஒரு வழக்காக பதிவு செய்து 989/2016 என்ற வழக்கு எண் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டது. மேற்படி செய்தி குறித்து மண்டல அலுவலர் வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், 179–வது வார்டுக்குட்பட்ட வேளச்சேரி பெத்தேல் அவென்யூ பகுதியில் இருக்கும் விளையாட்டுத்திடல் மற்றும் பூங்கா சம்பந்தமாக தினமலர் நாளிதழ் வெளியிட்ட செய்தியின் அடிப்படையில் மண்டல அலுவலரின் அறிக்கை கோரப்பட்டது. 30.11.20127 நாளிட்ட தனது கடிதத்தில், மேற்குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் குடியிருப்போர்கள் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைக்கும்படி கோரிக்கை வைத்ததின் அடிப்படையில், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு பழுதடைந்த நிலையிலிருந்த சுற்றுச்சுவர் முற்றிலுமாக அகற்றப்பட்டு விட்டது என்றும் தற்போது எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லை என்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், விளையாட்டுத்திடல் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2. தினமலர் நாளிதழ் சம்பந்மான மேற்படி செய்திக்கு உரிய விளக்கம் அளிக்க மண்டல அலுவலருக்கு ஓராண்டுக்கு மேல் ஆகியுள்ளது . இம்முறைமன்ற நடுவம் கோரும் அறிக்கைகளை காலம் தாழ்த்தாது உடனுக்குடன் வழங்க வேண்டும். இதுபோன்று காலம் தாழ்த்தி அறிக்கைகள் வழங்கும் நடவடிக்கையினை, 13–வது மண்டல அலுவலர் தொடருதல் கூடாது என அறிவுறுத்தி மண்டல அலுவலரின் அறிக்கையினை ஏற்று வழக்கை முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

மண்டல அலுவலர்,

**மண்டலம் – 13, அடையாறு மண்டலம்,**

சென்னை மாநகராட்சி,

எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,

அடையாறு, சென்னை – 600 020.

நகல்

மாநகராட்சி ஆணையர்,

சென்னை மாநகராட்சி,

ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,

பேரூராட்சி பிரிவு –3,

இ.கோ. / உதிரிகள்